# கதம்பம்



# கொண்டாட்டங்கள் நிறைந்த தமிழ்ச்சங்கம்!





## இந்த இதழில்...


- அறிவிப்பு மடல்
- கண்ணனின் வைர வரிகள்
- RTS-உள்ளரங்க போட்டி
- ஆடு பாம்பே, நீ விளையாடு பாம்பே!
- மகளிர் மட்டும்
- எனது பார்வையில் அமெரிக்கா
- 25ம் ஆண்டு விழா
- வெள்ளி விழா மலர்
- தமிழ்ப்பள்ளி
- நன்றி உரை


(பக்கத்திற்குச் செல்ல தலைப்பைக் கிளிக் செய்யவும்)


# அறிவிப்பு மடல்

என் அன்பார்ந்த கதம்பம் எழுத்தாளர்கள் மற்றும் வாசிப்பாளர்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த வணக்கம். கடந்த ஆண்டு ஒவ்வொரு மாதமும் வெளியிடப்பட்ட கதம்பம் இதழுக்கு நீங்கள் கொடுத்த பேராதரவிற்கு நன்றி. மாதம் தோறும் நீங்கள் அனுப்பிய உங்கள் அற்புதமான பதிவுகள் மற்றும் படைப்புகள் அனைத்தும் பெரியவர்கள் மற்றும் குழந்தைகள் என பலருக்கும் மிகவும் பயனுள்ளதாக இருந்தன.  இந்த வருடம் நமது கதம்பம் இதழ் மாதாந்திர இதழாக இல்லாமல் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை காலாண்டு இதழாக வெளியிடப்படும். தமிழ் சங்க உறுப்பினராக இருந்தால், நீங்களும் இந்த இதழில் எழுதலாம். கடந்த ஆண்டு நீங்கள் கொடுத்த அதே அன்பும் ஆதரவும் இந்த ஆண்டும் நமது கதம்பம் இதழுக்கு கொடுக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் படைப்புகள் மற்றும் புகைப்படங்களை newsletter.rts@richmondtamilsangam.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் படைப்பாற்றலை காண நாங்கள் மிகவும் ஆர்வமாக உள்ளோம். வேறு எந்த கேள்விகள் இருந்தாலும் இதே மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம். வெளியிடும் கட்டுரைகளை தேர்வு செய்வதில் நிர்வாகக்குழுவின் தீர்ப்பே முடிவானது.



சிவசக்தி அறிவுக்கண்ணன்
**செய்திமடல் இயக்குனர்**


RTS Presents
SUMMER
CAMP
CLAYTOR LAKE STATE PARK
25-27TH MAY

# என்னைக் கவர்ந்த சில வைரவரிகள்

(நொளம்பூர் கண்ணன்)

1) முதியோர் இல்லத்திற்கு பணம் கொடு, பொருள் கொடு, உணவு கொடு, உடை கொடு, ஆனால் உன் பெற்றோரை மட்டும் கொடுத்து விடாதே.

2) கஷ்டப்படுகிறவன் கிட்டே சிரிப்பு இருக்காது. சிரிப்பவன் கிட்டே கஷ்டம் இருக்காது. ஆகல் கஷ்டத்திலும் சிரிப்பவன் கிட்டே தோல்வி நெருங்காது.

3) செடியில் பூக்கும் பூவைவிட, ஒரு நொடியில் பூக்கும் புன்னகைதான் அழகு.

4) எதிலும் குறைகளைக் காண்பவர்களுக்கு ரசிக்கத் தெரியாது. எதையும் ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு குறைகளே தெரியாது.

5) மண்ணில் வாழ்வதற்குத்தான் பணம் வேண்டும். மற்றவர் மனதில் வாழ்வதற்கு அன்பான குணம் இருந்தாலே போதும்.

6) கோபத்தில் நிதானமும், குடிப்பத்தில் அமைதியும், துன்பத்தில் தைரியமும், தோல்வியில் பொறுமையும், வெற்றியில் தன்னடக்கமும் வாழ்க்கையை இனிமையாக்கும்.

7) பிறரை அறிந்து கொண்டவன் புத்திமான். தன்னை அறிந்து கொண்டவன் பக்திமான்.

8) தந்தவர்க்குக் கொடுப்பது நியாயம். தராதவர்க்குக் கொடுப்பது தர்மம்.

நொளம்பூர் கண்ணன்




**"2024: RTS-உள்ளரங்க போட்டி"** வெற்றியாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு வாழ்த்துகள்!!!

உள்ளரங்க நிகழ்வை மாபெரும் வெற்றியடையச் செய்த அனைத்து வீரர்கள், தன்னார்வலர்கள், நடுவர்கள், நிகழ்வு ஒருங்கிணைப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி!!

பிங் பாங் - பெயரே கவிதையாய் டேபிள் டென்னிஸ், விரலா அல்லது ஸ்டிரைக்கரா எது முதலில் தேயும் என்று போட்டி போட்ட காரம், என்றோ விளையாடி மறந்தே போயிருந்த தாயம், போர் நுணுக்கத்துடன் விளையாடி ஜெயித்த சதுரங்கம் என்று உங்களுக்காக 2/24/2024 அன்று டக்கர் மேல் நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

வருகை தந்த விளையாட்டு வீரர்களுக்கு பீட்ஸா வழங்கி, இந்த நிகழ்ச்சியின் sponsor ஆக அன்புடன் இசைந்திருக்கும் **Christian's Pizza** வுக்கு இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

உள்ளரங்கு விளையாட்டுகளில் குழந்தைகள் பங்கேற்பதை ஊக்குவிக்கும் வகையில், நிகழ்வின் போது அனைத்து குழந்தைகளுக்கும் பங்கேற்பு கோப்பையை RTS வழங்கி மகிழ்வித்தது.


இரிச்மண்டு தமிழ்ச் சங்கம்
1999-2024
25வது வருட சேவையில்










PAWS






















இரிச்மண்டு தமிழ்ச் சங்கம்










PAWS


இரிச்மண்டு தமிழ்ச் சங்கம்


இரிச்மண்டு தமிழ்ச் சங்கம்
1999-2024


99-2024




Chess








PAWS





# வெற்றியாளர்கள்

| Table Tennis - Doubles (Division #1) | | |
|---|---|---|
| Winners | Elamaran Anbalagan | Madhukumar Ramasamy |
| Runners | Vikram Nagulan | Brijesh Khatri |

| Table Tennis - Doubles (Division #2) | | |
|---|---|---|
| Winners | Prabhakaran Purushothaman | Vinoth Kanthan |
| Runners | Aravind Kothandaraman | Dinesh Sivaraman |

| Chess-Kids (K-3) | |
|---|---|
| Winner | Tanisha Porandla |
| Runner | Achinta Laksanna Vinod Kumar |

| Chess - Kids (K-5) | |
|---|---|
| Winner | Shirley Shaik |
| Runner | Pranav Sujai Ganesh |

| Chess - Kids (K-12) | |
|---|---|
| Winner | Navin Manoj |
| runner | Raghav Arunvisvanath |

| Chess - Adults | |
|---|---|
| Winner | Saravanan Gopalakrishnan |
| Runner | Madhan Ravichandran |

| Carrom (Doubles) | | |
|---|---|---|
| Winners | KrishnaKumar NarayanaSwami | Madhan Ravichandran |
| Runners | Madhukumar Ramasamy | Dhinesh Sivaraman |

| Dhayam (Doubles) | | |
|---|---|---|
| Winners | UmaDevi Nithyanandan | Bhavani Ashok kumar |
| Runners | Mathuniga Shankar | Manimegalai |

# ஆடு பாம்பே, நீ விளையாடு பாம்பே!



**நா. ஜெயகாந்தன்**

(கட்டுரையை மேம்படுத்தியமைக்கு நன்றி கார்த்தி அங்கமுத்து!)

சின்ன வயசிலிருந்தே நம்ம ஊர்ல நஞ்சு கொண்ட நாகப்பாம்புகளா பார்த்ததனாலயே, பாம்புன்னு யாராவது சொன்னாலே சும்மா உடம்புல ஒரு பயம் உண்டாகும். அது போதாதுன்னு, நம்ம தமிழ் சினிமால பாம்பு பழி வாங்குறத பார்த்து அது மேல ஒரு பயம் குறையவே இல்லை. ஒரு பாம்ப அடிச்சா அதோட துணைப்பாம்பு வீடு தேடி வந்து போட்டுரும், 25 ஆண்டுக்கு ஒரு முறை விலை மதிப்பில்லாத மாணிக்கக்கல் கக்கும், பாம்பு(!) புத்துல வெள்ளிக்கிழமையானா பால் ஊத்தணும், முட்டை கொடுக்கணும்னு பல கதையக் கேட்டிருக்கோம். இந்த ஊரிலும் பல கதைகள் உண்டு - குக்கும்பர் (வெள்ளரி) மணம் இருந்தால் அருகே செப்புத்தலையன் (CopperHead) பாம்பு இருக்கலாம், காட்டன் மவுத் (Cottonmouth) உங்களை துரத்தி வந்து கடிக்கக்கூடும்! இதெல்லாமே டுபாக்கூர் கதைன்னு ரொம்ப காலம் கழிச்சு தான் தெரிஞ்சிகிட்டேன்! சரி, கதை எது உண்மை எது ன்னு பார்க்கறதுக்கு முன்னாடி, எந்த பாம்ப கண்டா கொஞ்சம் ஒதுங்கி இருக்கணும், ஏன் பாம்ப பார்த்து பயப்பட வேண்டிய தேவையில்லன்னும், அது நம் இயற்கை உணவு சங்கிலியில் எவ்வளவு இன்றியமையாத கண்ணின்னும் பார்க்கலாம்.




நானும் எல்லாரையும் போல பயந்து இருந்தவன், நண்பர் நாகுவின் புதல்வன் ஹரி பரசு'வை ஒருமுறை அருகாமை வீட்டுக்காரர் வீட்டுக்கு வந்த பாம்பை அகற்ற கூப்பிட்டேன், அவர் வெளியூரில் இருந்ததால் "இது சாதாரண எலி பாம்பு, தைரியமாக ஒரு குப்பை பையில் போட்டு அருகே உள்ள காட்டுப்பகுதியில் விட்டுவிடிங்கள்" என தைரியம் கொடுத்தார். இன்னும் 10 நிமிடம் விட்டால் அந்த வீட்டுக்காரர் அதை கொன்று விடுவார் என்பதால் தைரியத்தை வரவழைத்து (முகத்தில் மட்டும்!) நானே அகற்றினேன்! அதன் பின் பாம்புகளை அடையாளம் காண்பது , மற்றும் பாதுகாப்பாக எப்படி அப்புறப்படுத்துவது என கற்றுக்கொண்டேன்.


உங்க வீட்டில் பாம்பு வந்துவிட்டால், அதை பாதுகாப்பாக வேறு இடத்திற்கு அப்புறப்படுத்த என்னை அணுகலாம் (ஜெயகாந்தன் 804-200-9350) அல்லது என்ரைகோ கவுண்டியை அணுகவும் (804- 646-5573). பாம்பு கடித்தால் உடனே அந்த பாம்பின் அடையாளத்தை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், அல்லது கைபேசியில் படம் எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்.
மருத்துவமனையில் தகுந்த சிகிச்சைக்கு இது உதவும். இதுவரை வெர்சீனியால பாம்பு கடிபட்டு உயிர் போனவர்கள் எவ்வளவு தெரியுமா? (விடை கட்டுரையின் இறுதியில்)!

பாம்புகள் இல்லன்னா, நம்ம வீடு, விளைநிலம், மற்றும் கடைகள்ல எலித் தொல்லை அதிகமாயிடும். சின்னத் தவளை, மூஞ்சூரு, எலி, நத்தை வகையிலிருந்து வயல்கள்ல அழிவை உண்டாக்கும் பெரும் பெருச்சாளி வரை பல வகை விலங்குகள் அதன் உணவுப் பட்டியலில் இருக்கு! ஒரு சில பாம்பு வகைகளின் நஞ்சிலிருந்து புற்றுநோய் போன்ற நோய்களுக்கான அரிய மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன! மனிதர்களுக்கு பாம்பாலான நன்மைகள் எனப் பட்டியலிட நிறைய உண்டு.




முதலில் Poisonous - Venomous இரண்டிற்கும் என்ன வேறுபாடு என்று பார்க்கலாம். Poisonous என்றால், அதைத் தவறி உண்டால் ஒவ்வாமை ஏற்பட்டு மரணம் நிகழ வாய்ப்பு உண்டு - எடுத்துக்காட்டாக, அரளி விதை, ஒரு சில வகை காளான் போன்றவை. Venomous என்றால், இரத்தத்தில் நஞ்சினைச் செலுத்தி செயலிழக்கச் செய்வது, சில நேரங்களில் மரணத்தில் முடியும் வாய்ப்புகள் அதிகம்! பாம்பு நஞ்சை நீங்கள் தவறி உண்டாலும் அதனால் பாதிப்பு அடையும் வாய்ப்பு குறைவே! (உங்கள் உணவு குழாய் மற்றும் உட்புற காயங்கள் இல்லாவிட்டால், நஞ்சைச் செரித்து விடுவீர்கள். இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் நலமே, நஞ்சு கூட!)

எந்த பாம்பைக் கண்டால் படை நடுங்கலைன்னாலும் கொஞ்சம் எச்சரிக்கை தேவைன்னு பார்க்கலாம். நம்ம வெர்சீனியால 3 வகை நச்சுப் பாம்புகள் உள - செப்புத்தலையன் எனும் Copper Head, காட்டன் மவுத் / வாட்டர் மொகாசின் (Cotton Mouth / Water Moccasin), மற்றும் கேன் பிரேக் / டிம்பர் ராட்டில் (Timber Rattle Snake / Canebreak). இந்த 3 வகை பாம்புகளில் ஏதாவது மனிதர்களைக் கடித்தாலும் விரைவாக மருத்துவமனைக்குச் சென்றுவிட்டால் பெரிய பாதிப்புல்லாமல் காப்பாற்றி விடலாம்!




நம் இரிச்மண்டில் செப்புத்தலையர்கள் மட்டும் தான் உலாவுகிறார்கள். மற்ற நஞ்சப்பர்களுக்கு இங்கே அனுமதி இல்லை போல. செட்டர்பீல்ட் பகுதியில் காட்டன் மவுத் சிலதும் வெர்சீனியா பீச் பகுதியில் காட்டன் மவுத் மற்றும் டிம்டர் ராட்டிலும் ஊர்கின்றன. கீழே உள்ள வரைபடத்தில் அவை எங்கே வாழ்கின்றன என பார்க்கலாம்.

பொதுவாக நம் வீடுகளில் காணப்படும் பாம்புகள் நஞ்சில்லாதவை தான். இதில், அதிகம் காணப்படுவது கருப்புப் பாம்பு - Black Racer, கார்ட்டர் பாம்பு (Garter Snake),எலிப் பாம்பு (Rat Snake), டீகேயின் காக்கி பாம்பு (Dekays Brown Snake), தண்ணீர் பாம்பு ( Northern Water Snake) மட்டுமே! இவை கடித்தாலும் மனிதர்களை பெரிதாக பாதிக்காது, மிஞ்சி போனால் ஒவ்வாமை வரலாம்! இவை சிறிய எலி, நத்தை, தவளை, பூச்சிகள் போன்றவற்றை உண்டு வாழ்பவை! இவற்றை எப்படி அடையாளம் கண்டுகொள்வது என வேறொரு பதிவில் பார்க்கலாம்!

பாம்புகள் பொதுவாக குளிர் காலத்தில் (செப்டெம்பர்-ஏப்ரல் வரை) புரூமேசன் (Brumation) என்னும் மந்த நிலையில் இருக்கும். புரூமேசன் என்பது காலநிலை குளிர்ச்சியடையும் போது பாம்புகள் அடையும் ஒரு நிலை, அவை சாப்பிடுவதை நிறுத்தி, வேகத்தை குறைத்து, ஒளிந்து கொள்ள இடம் தேடுகின்றன. இது உறக்கநிலையைப் போன்றது, ஆனால் பாம்புகளுக்கு புரூமேசன் போது அதிக தூக்கம் தேவையில்லை, சில சமயம் அவை உறங்கி எழுந்து உணவு மற்றும் தண்ணீருக்காக சிறிய தூரம் போய்த்தேடும். பொதுவாக பாம்புகள் புரூமேசன் காலத்தில் பல வாரங்களுக்கு சாப்பிடவோ, குடிக்கவோ, மலம் கழிக்கவோ நகராது. சில ஊர்வன இனங்கள் உயிர்வாழ்வதற்கு புரூமேசன் இன்றியமையாதது. வானிலை மாறும்போது அவற்றின் உடல் வெப்பநிலையை உயர்த்த முடியாது. நீண்ட மந்தத்தன்மை பாம்புகள் போன்ற ஊர்வனவற்றின் ஆயுளை நீட்டிக்க உதவுகிறது.

Northern Cottonmouth
*(Agkistrodon piscivorus)*
Average Length: 30-48 in. (76-122 cm)







மார்ச் மாதம் குளிர் காலம் முடிந்து வசந்த காலம் ஆரம்பிக்கும் போது வெய்யில் படுவதற்கு வெளியே வருகின்றன. அவை உண்ணும் உணவு செரிக்க வெயில் தேவை!

சரி இனி இவற்றை நம் வீடு மற்றும் தோட்டத்திற்குள் பாம்புகள் வராமல் இருக்க என்ன செய்யலாம் என்று பார்க்கலாம். பாம்புகள் வீட்டிற்கு வராமல் இருக்க எந்த வகை மருந்து/பொடிகளும் உதவாது! இவற்றை வாங்கி ஏமாறாதீர்!

- தோட்டத்தில், புல்லை அடிக்கடி வெட்டி, குட்டையாக வைக்கவும். பாம்புகள் குட்டையான புல்வெளிகள் வழியாக வெளியே தொங்குவதும், நகர்வதும் குறைவு, ஏனெனில் அவை வேட்டையாடிகளின் (எ.கா., பருந்துகள்) கண்களில் பட்டுவிடும். குட்டையான புல்வெளி பாம்புகளைக் காட்டிக் கொடுத்துவிடும். எனவே பாம்புகள் அவற்றை விரும்புவதில்லை.
- மரங்கள் மற்றும் புதர்களை ஒழுங்கமைக்க வேண்டும். உங்கள் வீடு மற்றும் வண்டி நிறுத்துமிடம் அருகே மரங்கள் மற்றும் புதர்கள் இருந்தால் அவற்றை நெருக்கமாக வெட்டி, கிளைகள் தரையைத் தொடராதவாறு வெட்டி வைக்கவும். மரங்கள் மற்றும் புதர்களுக்கு அடியில் 2-3 அடி இடைவெளியை உருவாக்குவது பாம்புகளின் நடமாட்டத்தைக் குறைக்கும் மற்றும் பாம்புகள் இருந்தால் அவற்றைக் கண்டறிவதை எளிதாக்கும்.



- பறவைகளுக்கு உணவு வைத்தால், அவற்றை வீட்டிலிருந்து முடிந்தவரை தூரத்தில் வைக்கவும். பறவைகள் உண்ணும்போது, உணவை கீழே சிதறி விடுகின்றன. தரையில் உள்ள உணவுத்துணுக்குகள் மூஞ்சுரு போன்ற கொறித்துண்ணிகளை ஈர்க்கின்றன, மூஞ்சுரு & Co பாம்புகளின் உணவு. பாம்பு ஈர்க்கப்படும். பறவைகளின் உணவை அதன் சேமிப்புப் பெட்டியில் இறுக்கமாக மூடி வையுங்கள்.
- ஒரு பெர்ச் கம்பத்தை (அமர்ந்து நோட்டம் விட வேட்டையாடிப் பறவைகள் பயன்படுத்தும் கம்பம்) நிறுவவும். பருந்துகள் மற்றும் ஆந்தைகள் இயற்கையான பாம்பு தின்னிகள், அவை நன்கு அமைக்கப்பட்ட பெர்ச் கம்பத்தை விரும்பி வந்து அமரும். அவை அங்கு அடிக்கடி வருவதால், எதுக்கு வம்பு என பாம்புகள் வேறு இடத்திற்கு நகர்ந்து விடுகின்றன. கம்பங்கள் நல்ல பார்வை படும்படி திறந்த பகுதிகளில் வைக்கப்பட வேண்டும்.

- மேலும், செல்ல விலங்குகளுக்கு வீட்டின் உள்ளேயே உணவளிக்கவும். செல்ல விலங்குகளுக்கு வெளியில் உணவளிப்பதால் பாம்புகளை ஈர்க்கும் பூச்சிகள் மற்றும் கொறித்துண்ணிகளை வரும். பின்னாலேயே பாம்பும் வரும். வெளியில் உணவளிப்பது தேவை என்றால், உண்ணாத / எஞ்சிய உணவை உடனே நீக்கிவிடுங்கள்.
- உங்கள் தோட்டத்தில் விறகுக் குவியல் இருப்பின் அவற்றை உடனே அப்புறப்படுத்தவும். விறகு, அதிகப்படியான மரக்கட்டைகள் மற்றும் பிற குப்பைகளை உங்கள் வீட்டிலிருந்து ஒதுக்கி வையுங்கள். மரக்கட்டைகள் மற்றும் விறகுகளின் அடுக்குகள், மற்றும் பிற குப்பைகள் ஆகியவை பாம்புகள் மறைவாக வாழ்வதற்கு ஏற்ற இடங்களாகும்.
- உங்கள் தோட்ட நிலப்பரப்பில் தழைக்கூளம் மற்றும் பெரிய பாறைகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். இவை பாம்புகள் மற்றும் அவற்றின் இரையை ஈர்க்கின்றன, இனப்பெருக்கம் செய்ய நல்ல வாழ்விடமாக அமைத்துக் கொள்ள பாம்புகளுக்கு வசதியாகிவிடும். அதற்கு பதிலாக, சரளை அல்லது கூழாங்கற்கள் போன்ற சிறிய இறுக்கமான கற்களைப் பயன்படுத்தவும். நீர் நிலைகள் பாம்புகளைக் கவரும் என்பதால் நீர்த்தோட்டம் மற்றும் வண்ணமீன் (கோய்) குளங்களை தவிர்க்கவும்.
- உங்கள் வீட்டின் அடித்தளத்தில் விரிசல்கள் இருப்பின் அவற்றை உடனே அடைத்திடுங்கள். பாம்புகள் இந்தப் பகுதிகளைப் பயன்படுத்துவதைத் தடுக்க வீடு, நடைபாதைகள் மற்றும் அடித்தளங்களில் விரிசல் மற்றும் பிளவுகளை அடைக்கவும். குளிர்சாதன மற்றும்/அல்லது வெப்பம் வீட்டில் இருந்து கசியும் விரிசல் மற்றும் பிளவுகளை கண்டறிய ஆற்றல்-தணிக்கை (Energy Audit) ஒரு சிறந்த வழி - இதே விரிசல்கள் மற்றும் பிளவுகள்தான் பாம்புகள் மற்றும் பிற சிறிய உயிரினங்களால் பயன்படுத்தப்படக்கூடும்.
- பாம்புகளை விலக்கி வைக்க 100% பயனளிக்கும் வழிகள் என எதுவும் இல்லை, மேலே பரிந்துரைத்த எல்லா முயற்சிகளும் தோல்வியுற்றால், வேலி அமைப்பது பற்றி கருத்தில் கொள்ளலாம். வேலியைத் தரைக்குள் சில அங்குலங்கள் புதைத்து, 1/4" அல்லது சிறிய திடமான கண்ணி அல்லது திடமான தாள்களைப் பயன்படுத்தி கட்டப்பட வேண்டும். மேலும், பாம்புகள் மேலே ஏறுவதைத் தடுக்க அதன் மீது ஒரு வளைவைச் சேர்க்க வேண்டும். பல நிறுவனங்கள் காட்டுவிலங்குகளிடம் இருந்து பாதுகாக்கவென்றே சிறப்பு வேலிகளை உருவாக்குகின்றன, தேடிப்பாருங்கள்.



முன் பத்தியில் கேட்ட பாம்பு கடிக்கான விடை:
இதுவரை வெர்சீனியால பாம்பு கடிபட்டு உயிர் போனவர்கள் எண்ணிக்கை - 0!

மனிதர்கள் கண்பட்டு உயிர்போன அப்பாவிப் பாம்புகள் எவ்வளவு இருக்கும் என யோசிச்சுப் பாருங்கள். எல்லாப்பாம்பும் கெட்ட பாம்பல்ல, நாம் தொல்லை கொடுக்காத வரை எல்லாமே "நல்லபாம்பு" தான், செப்புத்தலையன் உட்பட. மாற வேண்டியது நம் மனமும் கண்ணோட்டமும்தான். இயற்கையோடு இயைந்து வாழ்வோம்.






இரிச்மண்டு தமிழ்ச்சங்க சகோதரிகளே,

இருபத்தைந்தாவது வருட கொண்டாட்டத்தின் அடுத்த நிகழ்வாக, மகளிரைப் போற்றும் மார்ச் மாதத்தின் மணிமகுடத்தில் மற்றுமொரு வைரக்கலாக.. வெனிஸ் நகரத்தின் Masquerade Ball உங்களுக்காக இரிச்மண்டில் மார்ச் 9 அன்று அறுசுவை சைவ அசைவ உணவுகளுடன், வேடிக்கை விளையாட்டுகள் என உங்களை மகிழ்விக்க லேடீஸ் நைட் அவுட் வெற்றிகரமாக நடைபெற்றது.

வருகை தந்த அனைவருக்கும் சுவையான உணவு வழங்கி, இந்த நிகழ்ச்சியின் sponsor ஆக அன்புடன் இசைந்திருக்கும் **Suvai Foods** க்கு இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.








THIS DOOR TO
REMAIN UNLOCKED
DURING OCCUPANCY
JACK FRUIT BIRIYANI
PANEER CASHEW CURRY






CHETTINAD CHICKEN





# மக்கள் கருத்து

Thank you to the entire EC members . I had great fun. Wonderful dance performances it was lovely

It was wonderful and had great fun. Thanks to all the organizers

Hi all, I would say, very well organized, well planned, also everyone was very sportive, lovely performances, tasty food and wonderful gathering. Well done organizing team 👏👏 and everyone 👌👌👏👏. Enjoyed and was never bored for a moment 👌👌great way to meet all friends again...

Big shout out to the EC team !over all very well organized 👏👏

Really really it's a great evening, hats off to the EC team  thanks a bunch for this memorable evening ☺🙏

Hello all.. had an amazing evening with y'all ladies.. hats off to the RTS EC team for all the hard work n efforts 👏🏻👏🏻👏🏻👏🏻🤩 spl shout out to Akhila for preparing the yummy food & sponsoring the event..and all the dance performances were just WOW💃🥰 Have a good night :)

Hello ladies, it was a great pleasure meeting  you all yesterday! Thank you for organizing yet another amazing event.

Good morning!
Hello all! Thanks to the EC committee for organizing the ladies night out 😍! We had a fun time with u all ! Food was amazing ! Special thanks to Akila for sponsoring food !
Amazing dance ❤️performance ! I enjoyed throughly ..looking forward to see u all for the next event ..

Thank you to all the team organizers. 😍👏👏👏🎉It was the happiest night yesterday. I had fun, superfood & enjoyed it a lot. 🥳

Good morning!! Good to see all videos , reminding yesterday's fun and eventful night , being a first timer to this event felt good , it was an evening well spent ,getting to know new people . Looking forward for more such getogether .. kudos to the entire team👏💕

Agree with all the positive feedback here.
This is my first time as well and I enjoyed the well organized event. Great food, amazing performances and a friendly crowd. Lot of work should have gone into the preparation and I would like to thank each and everybody who had a part to play. Keep rocking!

# எனது பார்வையில் அமெரிக்கா

(நொளம்பூர் கண்ணன்)

எனது அன்பிற்கினிய கதம்பம் வாசகர்களுக்கு வணக்கம். பொதுவாக இந்தியாவில் அமெரிக்கா என்று சொன்னால் அனைவரின் மனதிலே நிழலாடுவது அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகை தான். மேலும் நமது தமிழ்த் திரையுலகில் அன்று முதல் இன்று வரை படத்தின் கதாநாயகன் அமெரிக்கா செல்கிறான் என்றதுமே திரையில் பொதுவாகக் காண்பிக்கப்படுவது வெள்ளை மாளிகை தான். அத்தகைய சிறப்பு வாய்ந்த வரலாற்றுப் புகழ்பெற்ற அமெரிக்க அதிபரின் அதிகாரப் பூர்வ இல்லம் மற்றும் அலுவலகமாக விளங்கும் வெள்ளை மாளிகைக்குத்தான் நாம் சென்று கொண்டிருக்கிறோம்.

வெள்ளை மாளிகை அருகில் சென்றதும் உண்மையில் வாழ்க்கையிலே ஏதோ ஒரு பெரிய சாதனை நிகழ்த்தியது போன்ற ஒரு உணர்வு எனக்கு. இந்த மாளிகை உருவான விபரங்கள் பற்றி நான் திரட்டிய செய்திகளை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். இந்தக் கட்டிடம் முதன் முதலாக 1792-ம் ஆண்டு அதாவது 232 ஆண்டுகளுக்கு முன்பு ஜேம்ஸ் ஹோபன் என்ற அயர்லாந்து கட்டிட வல்லுனரால் வடிவமைக்கப்பட்டது. அதன்பின் நிகழ்ந்த ஒரு பெரும் தீ விபத்தில் இந்த மாளிகை வெளிச்சுவர் தவிர மற்ற பகுதிகள் அனைத்தும் வெகுவாகப் பாதிக்கப்பட்டு, அதன் பிறகு இப்போதுள்ள வெள்ளை மாளிகை உருவாக்கப்பட்டது. வெகு நாள் வரை இந்த வெள்ளை மாளிகை அதிபரின் இல்லமாக மட்டும் தான் இருந்ததாம். அதன்பின் அதிபர் திரு ரூஸ்வெல்ட் அவர்கள் காலத்தில் தான், மாளிகைக்குள்ளேயே அதிபர் அலுவலகமும் உருவாக்கப்பட்டதாம்.

அடுத்த பக்கம் பார்க்க

உ

அதிபர் மாளிகையின் முன்பாக அமையப்பெற்ற புல்வெளி மைதானம் தேசிய பூங்கா சேவை மையத்தின் மூலம் பராமரிக்கப் படுகின்றது. இந்த கட்டிடத்தினைப் பார்க்க தினமும் சுமார் 30,000/- பேர் வருகிறார்கள். இந்த மாளிகை முன்பு பலரும் குடும்பத்துடன் புகைப்படங்கள், வீடியோ எடுத்துக் கொள்வது ஒரு கண் கொள்ளா காட்சிதான். நாங்கள் மட்டும் விடுவோமா! மாற்றி மாற்றி பல கோணங்களில் போட்டோ மற்றும் வீடியோக்கள் எடுத்துக் கொண்டோம். அங்கே அமர்ந்து பொழுது போக்க மாளிகை முன்பு அழகான பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாங்கள் உட்கார்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது எங்கள் அருகில் அமர்ந்திருந்த ஒரு வயதான அமெரிக்கர் எங்களிடம் நலம் விசாரித்து விட்டு வெள்ளை மாளிகையின் சிறப்புகளைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது அவர் அமெரிக்க ஆட்சியாளர்களை வெகுவாகப் புகழ்ந்தார். அப்போது அவர் சொன்ன தகவல் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. இந்த வெள்ளை மாளிகையில் அதிபர், அவர் குடும்பம், மற்றும் உறவினர் ஆகியோர் தங்கி, இங்குள்ள அனைத்து உபகரணங்களின் சேவையையும் பயன் படுத்திக் கொள்ளலாம். அனைத்து சேவைகளுக்கான கட்டணங்கள் அதிபரின் ஆண்டு ஊதியமான 4,00,000/- டாலரில் கழித்துக் கொண்டு மீதியுள்ள ஊதியம் தான் கொடுக்கப்படுமாம். உண்மையில் பாராட்ட வேண்டிய செயல் தான். மற்ற நாடுகளும் இந்த கொள்கையை ஏன் பின்பற்றக்கூடாது. பூங்காவில் அவரிடம் பேசிக்கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. பார்க்க வேண்டிய ஒரு பாரம்பரிய கட்டிடத்தை கண்டு களித்த மகிழ்ச்சியுடன் நாங்கள் வீடு திரும்பினோம்.

(அடுத்த பக்கம் பார்க்க)

ஒரு வார ஓய்வுக்கு பின்பு, எனது பார்வையில் பட்டது வாஷிங்டன் D.C.யில் உள்ள லிங்கன் நினைவகம். வெள்ளை மாளிகையிலிருந்து சற்று தொலைவில் போர் நினைவு தூண் பகுதியை அடுத்து கொஞ்ச தூரத்தில் அமைந்துள்ளது இந்த லிங்கன் நினைவகம். இது 1922-ம் ஆண்டு மே மாதம் 30-ம் தேதி பொதுமக்கள் பார்வைக்கு திறக்கப்பட்டது. உள்ளே நுழைந்ததும் மிக விசாலமான, பிரம்மாண்ட பூங்காக்கள், பலவிதமான நீரூற்றுக்கள் மிகச் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டு, செவ்வனே பராமரிக்கப்படுகின்றன. குடும்பத்தோடு குழந்தைகளுடன் பொழுது போக்க மிகச் சிறந்த இடம். சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் பிடிக்கும். வயதானோர், உடல் ஊனமுற்றோர் சுற்றிப் பார்க்க பேட்டரி கார், மற்றும் சக்கர நாற்காலி வசதிகளும் உண்டு.

இயற்கைக் காட்சிகளை ரசித்து புகைப்படங்கள் வீடியோ எடுத்தபின்பு, பூங்காவின் ஓரத்தில் கடைசியில் உள்ள பெரிய தூண்கள் கம்பீரமாக அமையப்பெற்ற ஒரு பெரிய கட்டிடத்தில் நுழைந்தோம். அங்கே உள்ள பெரிய ஹாலில் உயரமான மேடையில் அனைவரும் எளிதில் பார்க்கக் கூடிய வகையில் கம்பீரமாக உட்கார்ந்த நிலையில் காட்சி தருகிறார் முன்னாள் அதிபர் ஆபிரஹாம் லிங்கன் அவர்கள். யார் வேண்டுமானாலும் லிங்கன் சிலையுடன் படம் எடுத்துக் கொள்ளலாம். நாங்கள் படங்கள் எடுத்த போது, அன்று திருமணம் முடித்துவிட்டு வந்த ஒரு தம்பதிகளும் குடும்ப உறுப்பினர்களுடன் புகைப்படங்கள் வீடியோ எடுத்துக் கொண்டிருந்தனர்.

அந்த லிங்கன் சிலையை அடுத்து மூன்று அறைகள் இருந்தன. முதல் அறையில் திரு.லிங்கன் அவர்களின்

(அடுத்த பக்கம் பார்க்க)

வாழ்க்கை வரலாறு மற்றும் இளமை முதல் இறுதிவரையிலான புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளன. இரண்டாவது அறையில் அவரது வாழ்க்கை வரலாற்றை திரைப்படமாக காண்பிக்கிறார்கள். இன்னும் அவர் உபயோகப்படுத்திய பொருட்களை நினைவுச் சின்னங்களாக பார்ப்பவர்களுக்குப் புரியும் வகையில் விளக்கங்களுடன் சிறப்பாக அமைத்துள்ளனர். திருலிங்கன் நினைவக உதவியாளர் கூறிய ஒருதகவல் - இங்கே ஒரு புதிய பாதாள (UNDER GROUND) நினைவகம் ஒன்று 69 மில்லியன் செலவில் உருவாக்கப்பட்டு வரும் 2026-ம் ஆண்டு முடிவடைந்து திறக்கப்படுமாம். என்ன? மகிழ்ச்சிதானே!

"மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்"

இப்படிக்கு

நொளம்பூர் - கண்ணன் -

F/O K. வெங்கடேஸ்வரன்.










**எங்களுடன் கை கோர்த்து, பின்னிருந்து ஊக்குவித்து மெகா நிகழ்வுக்கு பேராதரவு தரும் எங்கள் sponsors களுக்கு இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் தனது மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறது.**



சங்கம் வைத்து தமிழ் வளர்ப்போம்!

நமது இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் கடந்த ஏப்ரல் 20ம் தேதி தனது 25ம் ஆண்டு மாபெரும் விழாவை வெற்றிகரமாக கொண்டாடியது. சூப்பர் சிங்கர்களுடன் ஒரே மேடையில் பாட ஒரு வாய்ப்பு, அரசியல்வாதி, நடிகர் மற்றும் தொழிலதிபரான திரு நெப்போலியன் அவர்களுடன் ஒரு சந்திப்பு, கடந்த 25 ஆண்டுகளாக இரிச்மண்டுத் தமிழ்சங்கத்திற்கு தொண்டாற்றிய குழுவினருக்கு கேடயம் வழங்குதல் என இந்த வருட இரிச்மண்டு தமிழ்சங்கக்குழு அசத்திவிட்டனர்.

சங்க வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட வெள்ளி விழா!!

உங்கள் பேராதரவுடன் மாபெரும் வெற்றி விழாவென நடந்தேறியது.

தோள் கொடுத்த நண்பர்களுக்கும், கரம் கோர்த்த தன்னார்வலர்களுக்கும் எங்கள் கோடானு கோடி நன்றி!!

நீங்கா நினைவுகளை நிழற்படங்களாக்கிய திரு. பெரியகருப்பன் சுப்பிரமணியன் அவர்களுக்கும் திரு. கார்த்திக் ராஜகோபால் அவர்களுக்கும் நன்றி!!














people




MOTOR SPORTS

# sponsors




# RTS - EC குழுவினர்




# வெள்ளி விழா மலர்

இரிச்மண்டு தமிழ்ச்சங்கம் 25ம் ஆண்டு வெள்ளிவிழாவை கொண்டாடும் வகையில் வெள்ளி விழா மலர் வெளியிடப்பட்டது. 25 ஆண்டு சங்க வரலாறு, கவிதைகள், கட்டுரைகள், தமிழக முதல்வர் திரு ஸ்டாலின் அவர்கள் முதல் திரைப்பட நடிகர் சிவகார்த்திகேயன் வரை பல பிரபங்களின் பாராட்டுகள், வாழ்த்து மடல்கள் என பல சுவாரசியமான தகவல்களை உள்ளடக்கி மலர் குழுவினரின் அயராத உழைப்பில் உருவான வெள்ளி விழா மலர் விரைவில் அனைவரின் பார்வைக்கு வெளிவரும்.










# தமிழ்ப்பள்ளி சுற்றுலா புகைப்படங்கள்



















Get Your Topping
Chocolate, Caramel, Fruit, Sprinkles, Candy, Walnuts, Almonds, Strawberry,
Pecans, Cheesecake
Funnel Cake
HARD FLAVORS
Vanilla
Chocolate
Strawberry











# போட்டி முடிவுகள்

## ஆத்திச்சூடி மற்றும் திருக்குறள் போட்டி முடிவுகள்

ஆத்திச்சூடி மற்றும் திருக்குறள் போட்டியில் பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள். போட்டிகளின் வெற்றியாளர்களை தேர்ந்தெடுக்க உதவிய நடுவர்கள் ஸ்ரீலதா சந்தானகோபாலன் , முத்துசாமி ஜீவானந்தம் , ஞானசேகரன் R அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

| | |
|---|---|
| Winners: | |
| | |
| Aathichudi (5 yrs) | |
| First | Thaaragai Aravindhan |
| Second | Samaira Senthilpandiyan |
| Third | Navvi Kaviyarasan |
| | |
| Thirukkural (6 yrs) | |
| First | Parimala Kalay |
| Second | Mrinalini Sujai Ganesh |
| Third | Aadit Anandbabu & Laxsara Selvakkannan |
| | |
| Thirukkural (7-8 yrs) | |
| First | Yazhini Sri Narshimman |
| Second | Prathyush Dinesh Balaji |
| Third - Samaira Villadian | Samaira Villadian |
| | |
| Thirukkural (9-10 yrs) | |
| First | Vallini Aravindhan |
| Second | Sakethram Kannan |
| Third | Mridula Prithiviraj |
| | |
| Thirukkural (11 yrs & above) | |
| First | Dharshana Karthikeyan |

# வாசிப்புப் போட்டி முடிவுகள்

வாசிப்புப் போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் வாழ்த்துகள். நடுவர்கள் மெய்யப்பன், குழல், இளமாறன் ஆகியோருக்கு எங்களது மனமார்ந்த நன்றிகள்.

| | |
|---|---|
| Winners: | |
| | |
| Category - Age 7-8 | |
| | |
| First Place | Samaira Villadian |
| Second Place | Darshan Somasundaram |
| Third Place | Yazhini Sri Narshimman |
| | |
| Category - Age 9-10 | |
| | |
| First Place | Pavithra Kalay |
| Second Place | Dhashwanth Gokulakrishnan |
| Third Place | Pranav Sujai Ganesh |
| | |
| Category - Age 11 & above | |
| | |
| First Place | Ananya Karthick |
| Second Place | Ashwika Rajagopal Sagunthala |

# எழுத்து, கதை, ரைம்ஸ் போட்டி முடிவுகள்

எழுத்து, கதை, ரைம்ஸ் போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் வாழ்த்துகள். நடுவர்கள் ராமசாமி மற்றும் மெய்யப்பன் ஆகியோருக்கு எங்களது மனமார்ந்த நன்றிகள்.

| | |
|---|---|
| Winners: | |
| Category: Storytelling | |
| First Place | Parimala Kalay |
| Second Place | Aadit Anandbabu |
| Third Place | Mrinalini Sujai Ganesh |
| | |
| Category: Rhymes | |
| First Place | Advika Arvind |
| Second Place | Aakrithi Naveen |
| | |
| Category: Writing (11 & above) | |
| First Place | Divyashree Balaji |
| Second Place | Dharshana Karthikeyan |
| | |
| Category: Writing (9-10) | |
| First Place | Kanishka Karthikeyan |
| Second Place | Dhashvanth Gokulakrishnan |
| Third Place | Arudh Nishanth |

# பேச்சுப் போட்டி முடிவுகள்

| | |
|---|---|
| Age Category (7-8) | |
| First | Harshitha Jayabal |
| Second | Yazhini Narashimman |
| Third | Mahashree Balaji |
| | |
| Age Category (9-10) | |
| First | Kanishka Karthikeyan |
| Second | Sakethram Kannan |
| Third | Aadhini Ashok |
| | |
| Age Category (11 & above) | |
| First | Ashwika Rajagopal Sagunthala |
| Second | Divyashree Balaji |
| Third | Nag Sahana Illa |











A.EAGLE










# ரிச்மண்டில் உள்ள வர்ஜீனியா ஸ்டேட் கேபிட்டலுக்கு களப்பயணம்














VIRGINIA'S HISTORY
IS AMERICA'S STORY
























**சிவசக்தி அறிவுக்கண்ணன்**

# நன்றி உரை

கதம்பம் இதழில் தங்கள் கதை, கட்டுரை, கவிதை மற்றும் பல பயனுள்ள விஷயங்களை இரிச்மண்டு சமூகத்துடன் பகிர்ந்து கொண்ட அனைத்து எழுத்தாளர்களுக்கும் தமிழ்ச்சங்க நிர்வாக குழுவின் மனமார்ந்த நன்றிகள்.

All submissions for Kadambam/கதம்பம் should be emailed to newsletter.rts@richmondtamilsangam.org by the 15th of each month.

## நன்றி!

செய்திமடலை சரிபார்த்து வெளியிட உதவிய மார்செலின், சந்தானம், சுபா பாபு , ஸ்ரீ லதா, இளமாறன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள் மற்றும் எங்கள் செய்திமடலுக்கு ஆதரவளித்த அனைத்து RTS குழு உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் நன்றி.

## Feedback

இந்த மாத செய்திமடல் பற்றி கருத்து தெரிவிக்க கீழே உள்ள இணைப்பை பயன்படுத்தவும்

**Click Here!**

newsletter.rts@richmondtamilsangam.org எனும் மின்னஞ்சலிலும் எங்களை தொடர்பு கொள்ளலாம். நன்றி!

RICHMOND TAMIL SANGAM

ஒற்றுமையே உயர்வு

## website:

www.richmondtamilsangam.com

## contact us:

richmondtamilsangam@gmail.com
newsletter.rts@richmondtamilsangam.org
tamilschool@richmondtamilsangam.org